# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 18 திங்கட்கிழமை (02.07.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 195




## எதிர்க்கட்சிக்குத் தாவ இ.தொ.கா.தீர்மானம்?

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறி எதிர்க்கட்சிகள் அணியில் இணையவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் இ.தொ.கா.அமர வேண்டாம் என்று அக்கட்சியின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமானை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ கேட் டுக்கொண்டார்.

இருப்பினும் இ.தொ.கா.சார்பாக எதுவித உறுதியும் அளிக்கப்படவில்லை எனத் தெரிகிறது. எதிர்க்கட்சி அணிக்கு தாவுவது தொடர்பாக உறுதியளிக்கா விட்டாலும் எதிர்க்கட்சியினர் 113 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலமிருப்பதாக காட்டும் வரைக்கும் அணி தாவாமல் இருக்க வேண்டும் என்று பசில் ராஜபக்ஷ கேட்டுக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.இது விடயமாக இ.தொ.காவின் ஆலோசகர் (06 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவை அழைப்பதில் கட்சிக்குள் உள்மோதல்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மாநாட்டுக்கு சந்திரிகா குமாரதுங்கவை அழைப்பதில் அக்கட்சியினரிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. சுதந்திரக்கட்சியின் தேசிய மாநாடு எதிர்வரும் யூலை 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதில் கட்சியின் 2 ஆயிரத்து 500 (06 ஆம் பக்கம் பார்க்க)

# அரசு-விடுதலைப்புலிகள் விரும்பினால்

# சமாதானப் பேச்சுக்கு உதவத் தயார்

## நோர்வே அரசு அறிவிப்பு

(கொழும்பு)

**அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் விரும்பினால் சமாதானப் பேச்சுக்களுக்கானஅனுசரணைப் பணியை மீளத்தொடங்க தாம் தயாராக இருப்பதாக நோர்வே அறிவித்துள்ளது.**

**பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்பட்டால் தாம் கிளிநொச்சி செல்வதற்கும் தயாராக இருப்பதாக இலங்கைக்கான நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் அறிவித்துள்ளார்.** (06 ஆம் பக்கம் பார்க்க)



## ஜே.வி.பியுடன் பேச்சு

(கொழும்பு)

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்சவும் மகிந்தவின் ஆலோசகரும் சகோதரருமான பசில் ராஜபக்ஷவும் இரகசியப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் விரைவில் மகிந்த அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கக்கூடும் எனத் தெரிகிறது. தன்னுடன் சுனில் கந்துநெட்டி, பிமல் ரட்நாயக்க,காமினி பத்ரன உள்ளிட்டோர் அரசாங்கத்துடன் இணைய உள்ளனர் என்றும் விமல் வீரவன்ச, பசில் (06 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஒத்துழைக்காது

### அமைச்சர் ஹக்கீம் உறுதி

(கொழும்பு)

அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இசைந்து கொடுக்கும் வேலையை தமது கட்சி செய்யாது என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டுமென தபால் மற்றும் தொலைத் தொடர்பு அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அரசினால் மேற்கொள்வதாக கூறப்படும் செயற்பாடுகளை நியாயப்படுத்துவதற்கு தமது கட்சியின் ஆதரவை கேட்கவேண்டாமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி உள்ளிட்ட தரப்பினருக்கு தான் கூறியுள்ளதாக ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் அரசு பேசுவதாயின் அடுத்த தேர்தலில் எமது ஆதரவு தேவையா என்பதை கொண்டுதான் பேசவேண்டுமெனவும் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கிழக்கில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளின் அடிப்படையில் தெற்கில் தேர்தல் நடத்தலாம் என அரசு நம்புகிறது. இந்த நம்பிக்கை தற்பொழுது 50 வீதமாக குறைந்துள்ளது. தமிழ்,முஸ்லிம் சமூகங்கள் நேர்மையுடனும் ஒற்றுமையுடனும் சிந்திக்காவிட்டால் அவர்களின் பாரம்பரிய பூமிகள் பறியாகும் நிலையை எதிர்கொள்ளவேண்டுமெனவும் அமைச்சர் எச்சரித்துள்ளார். (ச)

## ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸ் வந்தாலும் காணாமல் போனவர்களை மீட்க முடியாது

### ஜனாதிபதி ஆணைக்குழு தலைவர் சந்தேகம்

(கொழும்பு)

2006 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல் 2007 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரையிலான ஐந்து மாதங்களுக்குள் 430 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 307 பேர் கடத்தப்பட்டுள்ளனர். 1713 பேர் காணாமல் போயுள்ளனர் என்று ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மேல் நீதிமன்ற நீதியரசர் மஹாநாம திலகரத்ன தெரிவித்தார்.

கடத்தல்,காணாமல் போதல் மற்றும் படுகொலைசெய்தல் போன்ற சம்பவங்களால் சர்வதேச ரீதியில் நாட்டிற்கு பெரும் அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது.எனது தலைமையிலான ஆணைக்குழு விசாரணைகளை திறம்பட மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் படுகொலைகளும் மட்டக்களப்பில் கடத்தல்களும் அதிகரித்துள்ளன. ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸாரை அழைத்து வந்தாலும் காணாமல் போனவர்களை கண்டு பிடிக்க முடியுமா? என்பது சந்தேகமே என்றும் அவர் கூறினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற (06 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின் தாக்குதலில் 820 ஆட்லறி எறிகணைகள் அழிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான முள்ளிக்குளம் சமரில் இலங்கை இராணுவத்தின் 820 (130 மி.மீ) ஆட்லறி எறிகணைகள் அழிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. அச் செய்தி விபரம் வருமாறு, வன்னியில் கடந்த யூன் 2 ஆம் திகதி விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவத்தினர் வலிந்த தாக்குதலை மேற்கொண்டனர்.

இதில் இராணுவத்தின் 130 மி.மீ ஆட்லறி சேமிப்புக் களஞ்சியம் தாக்குதலுக்குள்ளானது. விடுதலைப்புலிகள் 130 மி.மீ ஆட்லறி எறி (06 ஆம் பக்கம் பார்க்க)

## உழவு இயந்திரம் தடம்புரண்டதில் கடற்படைச் சிப்பாய் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுச் சந்திக்கும் அல்லைப்பிட்டிக்குமிடைப்பட்ட இலந்தையடி எனுமிடத்தில் கடற்படையின் உழவு இயந்திரம் ஒன்று தடம் புரண்டதில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.மேலும் ஐவர் படுகாயமடைந்தனர். இச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம் பெற்றது.

அல்லைப்பிட்டி நோக்கி சென்று கொண்டிருந்த உழவு இயந்திரமே தடம்புரண்டதாக தெரிவிக்கப்பட்டது. இச் சம்பவத்தினையடுத்து அப் பகுதியூடான போக்குவரத்து சில மணி நேரம் தடைப்பட்டது. (ச)

## அமைச்சின் செயலாளர் விபத்தில் உயிரிழப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளர் உபாலி தகநாயக்க விபத்தில் உயிரிழந்தார். மகியங்கனை பதியதலாவ வீதியில் இடம் பெற்ற வாகன விபத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

இவ் விபத்தில் (06 ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் பஸ் கட்டணம் அதிகரிப்பு

தனியார் பயணிகள் பேருந்துகளின் கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளது. போக்குவரத்து அமைச்சரும் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் 17.55 சதவீதத்தால் அதிகரிக்க முடிபு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய பேருந்துக்கட்டணங்கள் நாளை மறுதினம் நடை முறைக்கு வருமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெறும் படுகொலைகளை தடுத்து நிறுத்த வேண்டும்

### அமெ.காங்கிரஸ் வலியுறுத்தல்

(கொழும்பு)

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நீதிக்குப் புறம்பான படுகொலைகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்று அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர். அமெரிக்க காங்கிரசின் 35 உறுப்பினர்கள் இது தொடர்பாக அந்நாட்டு ஜனாதிபதி புஷ்க்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளனர்.

இலங்கையில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிகழ்த்தப்படும் நீதிக்குப் புறம்பான படுகொலைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும்.பொதுமக்களின் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். விடுதலைப்புலிகளின் நீதி சேகரிப்பு (06 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

ஆசிரியர் வே.அன்பழகனின் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் மாதிரி வினாத் தாள் .

# வன்னியிலுள்ள ஐ.நா. அலுவலகங்களுக்கான எரிபொருள்களுக்கு அரசாங்கம் அனுமதி மறுப்பு

கிளிநொச்சியில் கடமையாற்றும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபன அதிகாரிகளுக்கான எரிபொருள் வழங்கலை அரசு தடுத்து நிறுத்தியுள்ளதாக அவ்வமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் கடிதம் அனுப்பி வைத்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசு மனிதாபிமான நடவடிக்கைகளின் ஈடுபடும் நிறுவனங்களுக்கு அவர்களின் போக்குவரத்து, வாகனங்கள், மின்பிறப்பாக்கிகள், உயிர் பாதுகாக்கும் ஒட்சிசன், தடுப்பு மருந்துகளும் ஏனைய மருந்துகளும் பாதுகாக்கப்படும் குளிரூட்டிகள் ஆகியவற்றிற்கு அவசியம் தேவையான எரிபொருளைத் தடை செய்து அவர்களை கஷ்டத்திற்குள்ளாக்கின்றது.

இதற்கு உடனடி நடவடிக்கை எடுக்காவிடில் ஐக்கிய நாட்டு ஸ்தாபனங்கள் வடக்குக் கிழக்கில் யுத்தத்தில் அகப்பட்டு அகதிகளான மக்களுக்குத் தம்மால் மேற்கொள்ளப்படும் மனிதாபிமானப் பணிகளை முற்றாக இடைநிறுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிமிருந்து சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களுக்கான எழுத்து மூல அனுமதி பெற்றிருந்தும் மார்ச் மாதத்தின் பின்னர் தமக்கு எரிபொருள் கிடைக்கவில்லை என்றும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் இணைப்பாளர் பிரைட்றிக் லயன்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

இத் துர்ப்பாக்கிய நிலை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனங்களை வன்னியில் தமது பணியை நாடக பாணியில் குறைக்க வேண்டியுள்ள எதுடன் மின்பிறப்பாக்கி, வாகனப் பாவனைகளையும் குறைக்க வேண்டி ஏற்படும் என்றும் ராஜபக்ஷவிற்கான கடிதத்தில் லயன்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

வடக்குக் கிழக்கில் தமது பணிகளை மேற்கொள்ளும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனங்களில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் ஆலயம், உலக உணவுத் திட்டம், சிறுவர்களுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம், ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் ஆகிய நிறுவனங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை ஐக்கிய நாடுகள் ஸ்தாபன நிறுவனங்கள் மிகவிரைவில் அடிப்படை மின்சக்தி, தொடர்பாடல் வசதிகளும் அற்றுப் போகவுள்ளது. இது அலுவலகங்களின் பாதுகாப்பை மிகக் கடுமையாகப் பாதிக்கும் என்று அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் அதிபர் அ.விஜயநாதன் இன்று ஓய்வு பெறுகின்றார். இவரது சேவை நலன் பாராட்டு விழா இன்று பாடசாலை உத்தியோகஸ்தர் நலன்புரிச்சங்கத் தலைவர் சீ.அமரஜோதி தலைமையில் நடைபெறுகின்றது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா, பருத்தித்துறைக் கோட்டக் கல்வி அதிகாரி பி.ரகுநாதன், வடமராட்சி வடக்குப் பிரதேச செயலாளர் இ.வரதீஸ்வரன், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி க.மயிலேறும்பெருமாள் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கின்றனர். (ச)

## விரைவில் வருகிறது இன்சுலின் மாத்திரை

ஊசி மருந்து போட்டுக் கொள்ளும் தொல்லையிலிருந்து விடுபட சர்க்கரை நோயாளிகளுக்கு இன்சுலின் மாத்திரை விரைவில் கிடைக்கப் போகின்றது.

பிரிட்டன் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் இது தொடர்பாக ஆய்வு செய்து மாத்திரை தயாரிக்க முடிவு செய்துள்ளனர். மாத்திரையை சில சர்க்கரை நோயாளிகளுக்கு அளித்து பரிசோதனை செய்து வெற்றியும் கண்டுள்ளனர். டில்லியில் பிரபல போர்ட்டீஸ் மருத்துவ மனை டாக்டர் அனுப் மிஸ்ரா கூறியதாவது,

ஊசி மருந்து மூலம் இன்சுலின் செலுத்திக் கொள்வதில் நோயாளிகளுக்கு சிரமம் இருக்கின்றது. அவர்களுக்கு மாத்திரை வடிவில் இன்சுலின் கிடைப்பதால் முழுப்பலன் விரைவாகவும் கிடைக்கும்.

மாத்திரையை சாப்பிட்டவுடன் வயிற்றில் போய்க் கரைந்து இன்சுலின் சத்துக்களை உடல் ஏற்றுக்கொள்கின்றது. உடனே பலன் கிடைக்கின்றது. தினமும் ஊசிபோடுவோருக்கு இன்சுலின் மாத்திரை மிகுந்த ஆறுதலைத் தரும். இவ்வாறு மிஸ்ரா கூறினார். (எ-5)

## சட்ட மாஅதிபர் சில்வாவுக்கு முன்னாள் இந்.நீதிபதி கண்டனம்

(சென்னை)

இலங்கையின் சட்டமா அதிபர் சி.ஆர்.டி. சில்வா விமர்சனங்களை மேற்கொள்ளும் போது முறையான வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும் என்று இந்தியாவின் முன்னாள் தலைமை நீதிமன்ற நீதிபதியும் இலங்கை மனித உரிமைமீறல்கள் தொடர்பான விசாரணைகளை மேற்பார்வை செய்யும் அனைத்துலக வல்லுநர் குழுவின் தலைவருமான பி.என்.பகவதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் சனிக்கிழமை ஊடகவியலாளர்களிடம் பி.என்.பகவதி கூறியதாவது,

இலங்கை சட்டமா அதிபர் சி.ஆர்.டி.சில்வா மிகவும் முன்யோசனையற்ற கருத்துக்களை வெளியிட்டிருக்கக் கூடாது. தனது கருத்துக்களை வெளியிடவும் மாற்றுக் கருத்துக்களைக்கூறவும் அவருக்கு உரிமையுள்ளது.

நீதிபதி என்ற வகையில் எப்போதும் நான் மாற்றுக் கருத்துக்களை வரவேற்கின்றேன். மாற்றுக் கருத்துக்கள் உண்மையைக் கண்டறிய உதவும். ஆனால் இத்தகைய விமர்சனங்கள் முறையான வார்த்தைகளில் கண்ணியமான வார்த்தைகளில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வசைபாடும் நிலைக்கு அது செல்லுமானால் அது தவறாகும். இலங்கை சட்ட மா அதிபர் அனைத்துலக நிபுணர்கள் குழுவை விமர்சிப்பதை நான் பாரதூரமாக கருதவில்லை. இக் குழுவை நான் பிரதிநிதித்துவப்படுத்துகின்றேன்.

எனவே தனிப்பட்ட வகையிலான கருத்தாக அதனைக்கருத முடியாது. ஆனால் எம்மில் தவறு இருப்பதாக அவர் கருதினால் முறையான கண்ணியமான வார்த்தைகளில் அவற்றைக் கூற வேண்டும் என்றார் பகவதி. இது தொடர்பாக இலங்கை சட்ட மா அதிபருடன் பேசுவீர்களா என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியதற்கு,

நான் ஏன் இதில் இறங்க வேண்டும். அனைத்துலக வல்லுநர்கள் குழுவில் உள்ள எனது நண்பர்களின் முழு ஆதரவை நான்கொண்டுள்ளேன். மகிந்தவின் ஆதரவும் எமக்குண்டு. நாம் சுதந்திரமான மனிதர்கள். எனக்கு அனைத்துலக ரீதியிலான மதிப்புள்ளது என்றார் அவர். (எ-5)

## தடயப் பொருள்களைப் பாதுகாக்குமாறு படையினருக்கு யாழ்.நீதிவான் உத்தரவு

யாழ்.குடாநாட்டில் அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெறும் பகுதிகளிலுள்ள தடயங்கள் மற்றும் சான்றுப் பொருள்களை விசாரணைகளுக்கு ஏதுவாகப் பேணிப் பாதுகாக்கப் படையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ்.நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான உத்தரவைக் கடுமையாக அமுல்படுத்துமாறு யாழ்.மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிக்கு அவர் பணித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கடந்த 28 ஆம் திகதி நல்லூர் கோவில் வீதிப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட இருவரும் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றின் முகாமையாளரும் பணியாளரும் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பிரதான வீதியின் மடத்தடிச் சந்தியிலுள்ள குறித்த தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பணிகளை முடித்துக் கொண்டு வீடு திரும்புகையிலேயே அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். எனினும் உயிரிழந்த வேளை அவர்களால் எடுத்துச் சென்றதாகக் கூறப்படும் அன்றைய விற்பனை மூலம் சேகரிக்கப்பட்ட பணம் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலைய திறப்புக் கோவை என்பவை பின்னர் காணாமல் போயிருந்தன.

சம்பவம் இடம்பெற்ற பகுதியிலிருந்து இருபுறமும் இராணுவச் சோதனைச் சாவடிகளும் அமைந்துள்ளன. துப்பாக்கிச்சூடு இடம்பெற்ற பகுதிக்கு உடன் படையினரும் வந்துள்ளனர். ஆயினும் சடலங்களை மீட்டெடுத்த பொலிஸார் குறித்த தடயப் பொருள்கள் அங்கு காணப்படவில்லை எனத் தெரிவித்துள்ளனர். இதனையடுத்தே யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா இராணுவத் தளபதிக்கு இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (எ-5)

## திருமணமாகி 84 வருடங்கள் ஒன்றாக வாழ்ந்த தம்பதி

இமாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த பியாரா சிங்-ஹன்சா தேவி ஜோடி திருமணமாகி 84 வருடமாக ஒன்றாக வாழ்ந்து வருகின்றனர்.

இதில் பியாரா சிங் 1904 இல் பிறந்தார். அவருக்குத்தற்போது 103 வயதாகிறது. ஹன்சா தேவிக்கு 101 வயதாகின்றது. இவர்களுக்கு 1924இல் திருமணம் நடந்தது. இவர்களுக்கு மூன்று மகன், இரண்டு மகள் உள்ளனர்.

பியாரா சிங் இராணுவத்தில் பணியாற்றினார். 2 ஆம் உலகப் போரில் அவர் பங்கேற்றும் உள்ளார். உலகிலேயே இவ்வளவு காலம் ஒன்றாக வாழ்ந்த தம்பதி இவர்கள் தான்.

எனவே கின்னஸ் சாதனைப் புத்தகத்திற்கு இந்தத் தகவலையனுப்பி வைத்துள்ளனர். அவர்கள் நேரில் ஆய்வு செய்து சாதனையைப் புத்தகத்தில் வெளியிடுவார்கள். (எ-5)

## ஜனாதிபதி மகிந்த பதியந்தலாவ விஜயம்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று பதியந்தலாவப் பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டார். அங்கு சென்ற ஜனாதிபதி பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய்ந்ததுடன் அங்குள்ள விகாரைகளுக்கும் சென்று வழிபாட்டிலும் ஈடுபட்டார்.

அதேவேளை கிழக்கில் இராணுவத்தினர் கைப்பற்றிய பிரதேசங்களில் பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது. (ச)

## இராசிபலன்

02.07.2007
(ஆனி 18 திங்கட்கிழமை)
துதியை முன்னிரவு 7.29 மணிவரை
உத்தராடம் முன்னிரவு 7.14 மணிவரை
இராகுகாலம் 7.26-8.56 மணிவரை
சுபநேரம் 11.56-1.26 மணிவரை

| | |
|---|---|
| மேடம்:- | அதிகாரம்,நல்ல செய்தி, காரிய அனுகூலம், போசன நன்மை. |
| இடபம்:- | ஆன்றோர் மதிப்பு, கட்டுப்பாடு, பயணம், வயிற்றுக் கோளாறு. |
| மிதுனம்:- | எதிர்பாராத பிரச்சினை, உடல்நலக் குறைவு, முயற்சி தடங்கல், பிரயாண பயம். |
| கடகம்:- | வாகன சுகம், கௌரமானநிலை, அபூர்வ சந்திப்பு, புதிய பொருள் சேர்க்கை. |
| சிங்கம்:- | சத்துரு ஜெயம், தீடீர் பயணம், பண வருவாய், இஷ்டசித்தி. |
| கன்னி:- | வியாபார நன்மை, தாழ்ந்த சுபாவம், சிறு வியாதி, முயற்சி தாமதம். |
| துலாம்:- | தாய் வழியுறவு, உடல்நலக்குறைவு, வீண் பயம், காரிய தாமதம். |
| விருச்சிகம்:- | சகோதரர் உதவி, இனிய அனுபவம், புதிய பொருள் சேர்க்கை, நல்ல தகவல். |
| தனுசு:- | கடின வார்த்தை, தனவிரயம், மாதர் நட்பு, வேலைச்சுமை. |
| மகரம்:- | நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, பெரியோர் சந்திப்பு, போசன சுகம். |
| கும்பம்:- | கோபப்படுதல், காரிய அலைச்சல், பண விரயம், உறவினர் சந்திப்பு. |
| மீனம்:- | எடுத்த காரியம் கைகூடும், பாராட்டு, நண்பர்கள் சந்திப்பு, தனதானிய சேர்க்கை. |

-வளவன்

## மனித உரிமைகள் சீர்குலைந்துள்ளதே சமகாலப் பிரச்சினைகளுக்கு காரணம்

### ரணில் உரை

(கொழும்பு)

இலங்கை வெறுக்கத்தக்க நாடாக மாறியிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள் காரணமாக இந்நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஊழல், வன்முறை மற்றும் அராஜகத்திற்கு எதிரான சட்டத் தரணிகள் ஒன்றியத்தினால் கொழும்பில் நேற்று ஒழுங்கு செய்யப்பட்ட வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். நாட்டில்மனித உரிமை சீர்குலைந்துள்ளது சமகாலப் பிரச்சினைகளுக்கும் முக்கிய காரணமாகவுள்ளது. இலங்கையர் என்ற முறையில் இவற்றைத் தொடர விடாது நிறுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (கு)


தேவை

பிஸ்கட், கேக் செய்யக் கூடிய பெண் பிள்ளைகள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

சீலன் பேக் ஹவுஸ்
நவாலி தெற்கு,
நவாலி

(c-202)





யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஞானக்குழந்தை இல்ல வருடாந்த பாலர் விளையாட்டு விழாவில் ஞானக் குழந்தை இல்ல பொறுப்பாசிரியை திருமதி றயினி பிரபாகரன் தொடக்கவுரை நிகழ்த்துவதையும் விழாவின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் மற்றும் சிறப்பு விருந்தினர் ஈஸ்வரநாதபிள்ளை குமரன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.


அலங்கார உற்சவம்



உரும்பிராய் மேற்கில் அமைந்துள்ள ஸ்ரீ நாக பூசணி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று 02.07.2007 திங்கட் கிழமை நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம். இன்று சங்காபிஷேகமும் நடைபெறும்.

-பரிபாலனசபை

(c-203)

# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள் ④

பகுதி -I
நேரம் – 45 நிமிடம்

ஆக்கம்: அன்பழகன்
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

**1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களின் விடைகள் தரப்பட்டுள்ளன அவற்றில் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1 ஆம், 2ஆம் வினாக்களில் " ? " வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருக்கோலத்தைத் தெரிவு செய்க.


1)




2)



**3 ஆம் ,4ஆம் வினாக்களில் விடுபட்ட இடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

3)



4)



**5ஆம், 6ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் முதலில் தரப்பட்ட கூற்றிற்கு மிகவும் பொருத்தமான விளக்கத்தைத் தெரிவு செய்க.**


5) ஒழுக்கமில்லாது கல்வியைக் கற்றவன் புத்தக மூட்டையை சுமந்த கழுதை போன்றவன்
1. ஒருவன் ஒழுக்கக் கல்விக்கு முக்கியம் கொடுக்க வேண்டும்.
2. உயர்கல்வி பெற்ற பின்னர் ஒழுக்கத்தைக் கற்க வேண்டும்
3. ஒருவன் கல்வியோடு ஒழுக்கத்தையும் சேர்த்துக் கற்கவேண்டும்

6). நன்றி புரிந்தோர் தம்மை நாமும் நினைக்க வேண்டும்
1. எமக்கு உதவியோரை நாம் மறக்கக்கூடாது
2. ஒருவர் உதவி செய்தால் அதே போல நாமும் செய்யவேண்டும்
3. பிறர் நமக்கு உதவி செய்யவேண்டும்

**7ஆம் 8ஆம் வினாக்களில் உள்ள சம்பவங்களை ஒழுங்குபடுத்தும் போது நடுவில் வரும் சம்பவத்தை தெரிவு செய்க.**

7) A ஆட்டோ ஒன்றில் புகையிரத நிலையம் சென்றோம்
B பிரயாணத்திற்கான ஆயத்தங்களை செய்தோம்
C புகையிரதத்தில் ஏறிப் பயணத்தைச் செய்தோம்
D அப்பாவும் நானும் அதிகாலையில் எழுந்தோம்
E பயணத்திற்கான அனுமதிச் சிட்டை வாங்கினோம்
1. A 2. C 3. D

8) A அடுத்த பாடம் பற்றிய அறிவுறுத்தல்களை வழங்குகிறார்
B சரி பிழை பார்க்கிறார்
C ஆசிரியர் வகுப்பறைக்கு வருகின்றார்
D மாணவர்களைக் கொண்டு பயிற்சியைச் செய்விக்கிறார்
E கணித பாடத்தைக் கற்பிக்கிறார்
1. B 2. D 3. E

9) சதுரவடிவக் கடதாசி ஒன்றை நான்காக மடித்து அதன் ஒரு பக்கத்தின் வழியே ஒரு சிறு முக்கோணியும் வட்டமும் வெட்டி எடுக்கப்பட்ட விதத்தை உரு A காட்டுகின்றது. கடதாசி விரிக்கப்படும் போது பெறும் வடிவத்தைக் காட்டும் படத்தினைத் தரப்பட்டுள்ள ஏனைய மூன்று உருக்களிலிருந்து தெரிவு செய்க.



10) வழமைக்கு மாறாக அதிகமான பிரயாணிகள் பேருந்து நிலையத்தில் நிற்கின்றார்கள் இதற்குக் காரணம்
1. நீண்ட நேரமாக பேருந்து நிலையத்திற்கு பேருந்துகள் வராமை
2. சுற்றுலாக் காலமாக இருக்கலாம்
3. மழைக்காலமாக இருக்கலாம்

**11ஆம், 12ஆம் வினாக்களுக்கு பின்வரும் பாடலை வாசித்து விடையைத் தெரிவு செய்க.**

உள்ளக் கமலம் தன்னில் எதையும்
ஒளித்து வையா எழில் நிலா
பிள்ளை மனது கொண்டு ஒளியைப்
பெய்து எங்கும் செல்லுதே !


11) 'பிள்ளை மனது கொண்டு ஒளியை எங்கும் பெய்து செல்லுதே' என்பதன் கருத்து
1.விளையாடிக் கொண்டு செல்கிறது
2. சூதுவாது கள்ளங்கபடமற்ற தூய்மையாக சேவை செய்கிறது
3.ஒன்றும் தெரியாமல் செல்கிறது

12) எழில் நிலா என்பதன் கருத்து
1.வட்டமான சந்திரன் 2.அழகான சந்திரன் 3. எளிமையான சந்திரன்

13) மீன், நீர் ,அலை இவை எதனுடன் சம்பந்தப்பட்டவை
1.மீனவன் 2.கடல் 3.தொழில்

14) சாரதி , நடத்துநர் , ஆசனங்கள் இவை எதனுடன் சம்பந்தப்பட்டவை
1.வீதி 2.தொழில் 3.பேருந்து

**15ஆம், 16ஆம் வினாக்களுக்கு விடை எழுதுவதற்கு பல்வேறு வடிவங்களையும் வெவ்வேறு இயல்புகளையும் கொண்ட பின்வரும் உருக்களைப் பயன்படுத்துக.**




15) ஒத்த இயல்புகள் உள்ள மூன்று உருக்களைக் காட்டும் விடையின் கீழ்க் கோடிடுக.
1.CFK 2.BEG 3.DHJ

16) ஒத்த இயல்புகள் இல்லாத மூன்று உருக்களைக் காட்டும் விடையின் கீழ் கோடிடுக.
1.CFK 2.BEG 3.CHJ

**கீழே உள்ள வினாக்களில் காணப்படும் சொற்களை நன்கு விவரிக்கின்ற கூற்றினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.**

17) சனத்தொகை என்பது
1. நாட்டிலுள்ள ஆண்கள் தொகையைக் குறிக்கும்
2. உலகத்திலுள்ள மனிதர்கள், மிருகங்கள் தொகையைக் குறிக்கும்
3. நாட்டிலுள்ள மக்கள் தொகையைக் குறிக்கும்

18) சந்தை என்பது
1. பொருட்கள் விற்கும் இடம் 2. பொருட்கள் விற்று வாங்கும் இடம்
3. பொருட்களை மக்களுக்கு காட்டும் இடம்

**19தொடக்கம் 20 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் முதலில் தரப்பட்டுள்ள கூற்று பிழையானது ஆகும். இக்கூற்று ஏன் பிழையானது எனக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கீறிடுக.**

19) முயல் தனது கொம்பினால் நிலத்தைத் தோண்டியது
1.முயல் நிலத்தைத் தோண்டாது 2. முயல் வாலால் நிலத்தைத் தோண்டும்
3.முயலுக்குக் கொம்பு இல்லை

20)கிழக்குத் திசையில் சூரியன் மறையும் போது வானம் அழகுடன் பிரகாசிக்கும்
1.சூரியன் மறையும் போது வானம் அழகுடன் பிரகாசிக்கிறது
2.ஆகாயம் ஒருபோதும் பிரகாசிக்கமாட்டாது
3.சூரியன் கிழக்குத் திசையில் மறையமாட்டாது

21) மாணவன் ஒருவன் காலையில் எழுந்து பாடசாலைக்குச் சென்று படிக்கும் வரையுள்ள நிகழ்வுகள் படங்கள் மூலம் காட்டப்பட்டுள்ளன. ஐந்து நிகழ்வுகளையும் ஒழுங்கு முறையில் காட்டும் சரியான விடையின் கீழ்க்கோடிடுக.


1. 1,3,5,4,2 2. 1,2,4,3,5 3. 5,2,1,4,3

22) பின்வரும் படங்களில் காட்டப்பட்டுள்ள தொப்பி வியாபாரியும் குரங்குகளும் கதையின் ஒழுங்கை சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.


1) 4,2,1,3 2) 4,1,2,3 3) 4,2,3,1


**கீழுள்ள அடைப்பினுள் 2 தொகுதி சொற்கூட்டங்கள் தரப்பட்டுள்ளன. இவ்விரு தொகுதி சொற்கூட்டங்களிலுமுள்ள பிற சொற்களைச் சேர்க்காமல் ஆக்கப்பட்ட வசனத்தின் கீழ்க் கோடிடுக.**


**தொகுதி I : செய்தல் , உணர்வு , பெரியோர் ,நாம் , கொள் , வேண்டும், மரியாதை**
**தொகுதி II : உண், காலை ,உலா, மாலை , செய், உறங்கு , உடற்பயிற்சி**

23) தொகுதி -I லிருந்து ஆக்கக் கூடிய வசனம்
1. கடவுள் பெரியோர்க்கு மரியாதை செய்யும்படி கூறியுள்ளார்.
2. நாம் பெரியோர்க்கு மரியாதை செய்தல் வேண்டும்
3. கடமை உணர்வுடன் தொழில் செய்தல் வேண்டும்

24) தொகுதி - II லிருந்து ஆக்கக் கூடிய வசனம்
1. உண்டபின் உலாவி உறங்கு 2. காலையும் மாலையும் உடற்பயிற்சி செய்
3. காலையும் மாலையும் உடற்பயிற்சி செய்வதற்கு முன் உண்டு கொள்

**முதலில் தரப்பட்ட கடதாசி அட்டையை மடிப்பதன் மூலம் நான்கு உருக்களைப் பெற முடியும். ஒன்றை மட்டும் பெறமுடியாது அதனை தெரிவு செய்க**

25)



26)



27ஆம், 28 ஆம் வினாக்களுக்கு விடை அளிப்பதற்கு தரப்பட்ட பந்தியை வாசிக்கவும்

அமலன் பரீட்சையில் சித்தியடையும் எண்ணத்துடன் சிறப்பாகப் படித்தான். இரவும் பகலும் முழுக் கவனமும் படிப்பிலேயே கழிந்தது. உண்ணும் போதும் உறங்கும் போதும் கனவிலும் நினைவிலும் பாடசாலையில் ஆசிரியர் கற்பித்தவைகளையே அவன் கண் முன் தெரிந்தன. பரீட்சையும் நடந்து பெறுபேறுகளும் விரைவிலேயே வந்து சேர்ந்தன. அவனது கண்களை அவனால் நம்ப முடியவில்லை. முதல் தரத்தில் அவன் சித்தியடைந்திருந்தான். செய்தியறிந்த அவனது தாய் ஆனந்தக்கண்ணீர் சொரிந் தாள்.

27) இப்பந்திக்குப் பொருத்தமான தலைப்பு
1.தோல்வியே வெற்றியின் முதற்படி 2.கடின உழைப்பு வெற்றி தரும்
3.ஒரு தாயின் ஆனந்தக்கண்ணீர்

28) அமலனைப்பற்றி குறிப்பிடக்கூடிய விடயம்
1.தாயின் சொற்படி நடந்தான் 2.கடுமையாகப் படித்தான்
3. உண்ணாமலும் உறங்காமலும் படித்தான்

**தடித்த எழுத்தில் உள்ள கூற்றுக்களை நாம் உண்மையானவை என எடுத்துக் கொண்டால் அவற்றை அடுத்துத் தரப்பட்டுள்ள மூன்று கூற்றுக்களில் ஒன்று உண்மையானதாக இருக்கும். அதன்கீழ்க் கோடிடுக.**

29) ***விருந்திற்கு வந்தவர்களில் அநேகர் பெண்கள்*** ஆகவே
1.விருந்திற்கு ஆண்கள் வரவில்லை 2.விருந்திற்கு பெண்கள் மட்டும் வந்தனர்
3.விருந்திற்கு ஆண்களும் வந்தனர்

30) ***அறிவாளிகள் பெரும்பாலும் அதிகம் பேசுவதில்லை*** ஆகவே
1. பேசுபவர்கள் எல்லோரும் அறிவற்றவர்கள்
2. அறிவாளிகள் மிக அருமையாகவே பேசுவர்
3.பேசாதவர்கள் எல்லோரும் அறிவாளிகள்

**31 முதல் 40 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**


31)


இரு கட்டங்களிலும் வரவேண்டிய எண்ணையும் எழுத்தையும் காண்க. ..............................

32) வீதியோரமாக ஆடுகள் வரிசையாக சென்று கொண்டிருந்தன. ஒரு ஆட்டிற்கு முன்னால் இரண்டு ஆடுகளும் பின்னால் இரண்டு ஆடுகளும் நடுவில் ஒன்றுமாகச் சென்றன. அப்படியானால் வீதி யோரமாகச் சென்ற ஆடுகள் எத்தனை. ..............................................

33) அருணன் தம்பதிகளுக்கு நான்கு ஆண்பிள்ளைகள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு சகோதரிகள் அப்படியானால் அருணன் குடும்பத்தில் எத்தனை பிள்ளைகள் உள்ளனர்........................

34) ஒரு கடிகாரத்தின் நிமிட முள் மணிகாட்டும் முள்ளை பகல் 12 மணியிலிருந்து நள்ளிரவு 12க்குள் எத்தனை தடவைகள் கடந்து செல்லும்..............................................


35) உரு IIIஇல் வெற்று வட்டத்தினுள் வரவேண்டிய எண்ணைக் காண்க.............


(...............)

36) A,B,C,D,E ஆகியோர் வரிசையாக நிற்கின்றனர். C ற்குப்பின்னால் B நிற்கின்றார். C இற்குப்பின்னால் D நிற்கின்றார். E இற்குப் பின்னால் A உம் A இற்குப் பின்னால் D யும் நிற்கின்றனர். நடுவில் நிற்பவர் யார்? ..........................

37) Q விலும் பார்க்க P நிறை கூடியவர் Q வும் R உம் சமநிறை உள்ளவர்கள் R இலும் பார்க்க S நிறை குறைந்தவர் S இலும் பார்க்க P நிறை கூடியவர் இங்கு நிறை கூடியவர் யார்? ......................

38) சத்தியதாசனின் தொலைபேசி எண் 6 இலக்கங்களைக் கொண்டது. முதலாம் ,ஆறாம் இலக்கங்கள் ஒரே எண்களாகும். ஆனால் அவை இரட்டை எண்கள் ஆகும். இரண்டாம் இலக்கம் முதலாம் இலக்கத்தின் அரைவாசியாகும்.கடைசி இலக்கம் 6 ஆகும். மொத்தமாக ஆறு இலக்கங்களையும் கூட்டினால் கூட்டுத்தொகை 15 ஆகும்.எனில் அத் தொலைபேசி எண் யாது? ......................

39) பல்வேறு எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சதுரமுகி ஒன்றின் இரு நிலைகள் கீழே காட்டப்பட்டிருக்கின்றன.


இச் சதுரமுகியில் T எழுத்து உள்ள பக்கத்திற்கு எதிரான பக்கத்தின் எழுத்து யாது?................

40) அரவிந்தக் கண்ணன் ஒரு முட்டையை சாப்பிடுவதற்கு வேக வைக்க மூன்று நிமிடங்களாகும். அவன் மூன்று முட்டைகளை வேகவைத்து சகோதரர்களுக்கு சாப்பிடக் கொடுப்பதற்கு எத்தனை நிமிடங்களாகும்..........................................................

# தெற்காசியாவின் மூன்றாவது பெரும் படை

இந்த மிலேனியத்தின் ஆரம்பத்தில் தென் ஆசியாவின் பெரும் சமர்க்களமாக இலங்கை மாறியிருந்தது. இரண்டாம் உலகப் போருக்கு பின்னரான இராணுவத்தின் பேரழிவு ஒன்று குறுகிய காலத்தில் இந்த சின்னஞ்சிறிய தீவில் நிகழப்போகின்றதோ என அனைத்துலகம் அங்கலாய்த்த வேளையில் நோர்வேயின் அனுசரணையுடன் போர் ஓய்வுக்கு வந்தது.

விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தவும் படை நடவடிக்கைகளை நிறுத்தவும் சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான முந்தைய அரசாங்கம் சம்மதித்தது. போரும் சமாதானமும் ஒருங்கே பயணிக்க முடியாது என்ற தத்துவமும், போரின் மூலம் சமாதானத்தை எட்டுதல் என்ற ஏமாற்றுத்தனங்களினதும் உண்மைத் தன்மையும் புரிய ஆரம்பித்தது.

படைவலுச் சமநிலையில் உருவான அமைதிச் சூழலை தக்கவைக்க வேண்டுமெனில் இரு தரப்பும் அரசியல் பொருளாதார மற்றும் இராஜதந்திர வழிகளில் சமமாக பேணப்பட வேண்டும் என்பது உலகத்தின் நியதி. ஆனால் இங்கு கடந்த போன ஐந்து வருடங்களில் அவை படிப்படியாக தவற விடப்பட்டுள்ளன என்பதை விடவேண்டுமென்றே தவறவிடப்பட்டன எனக் கூறுவதே பொருத்தமானது.

தவறவிட்டவர்கள் வேறு யாரும் அல்ல, நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தரப்போவதாகக் கூறியவாறு உள் நுழைந்த இணைத்தலைமை நாடுகள்தான் எனினும் அவர்கள் உள்நுழைந்த நோக்கங்கள் தற்போது தாறுமாறாக குழம்பிப் போயுள்ள நிலையில் இரு தரப்பையும் எவ்வாறு மீண்டும் பேச்சுக்கு திரும்ப வைப்பது என்பது குறித்து கடந்த வாரம் ஒஸ்லோவில் கூடி ஆராய்ந்துள்ளனர்.

ஒரு தரப்பை பலப்படுத்துவதன் மூலம் மறு தரப்பின் அபிலாஷைகளை மழுங்கடிக்கலாம் என எண்ணியவர்கள் தாம் விரித்த வலையில் தாமே இன்று சிக்கி விட்டனர். தற்போது மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக கடுமையாக ஆராய்ந்து வருகின்றனர்.

எந்தனையோ அரசுக்களை தமது அழுத்தங்கள் மற்றும் படை நடவடிக்கைகள் மூலம் அமைதி வழிக்குக் கொண்டுவந்த மேற்குலகத்தின் தற்போதைய ஆராய்வு நட வடிக்கைகள் ஒரு சிறந்த நாடகமாகவே தமிழ் மக்களால் நோக்கப்படுகின்றது.

இந்த அரசியல் நாடகங்களுக்கு அப்பால் மேற்குலகம் மற்றும் சில ஆசிய நாடுகளினால் கடந்த ஐந்து வருட காலத்தில் வழங்கப்பட்ட படைத்துறை ஆதரவுகள் இலங்கையை தென்னாசியாவில் மூன்றாவது பெரிய படைத்துறை நாடாக இன்று மாற்றியுள்ளது.

**வேல்ஸிலிருந்து அருஷ்**

மூன்றாம் ஈழப்போர் முடியும் போது 95,000 இராணுவத்தினரை கொண்டிருந்த இலங்கை இராணுவம் போர் நிறுத்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புக்களு டன் ஒரு இலட்சத்தை தாண்டியிருந்தது. தற் போது கிழக்கில் அகலக் கால்வைக்கும் படை நடவடிக்கைகள் மற்றும் வடக்கை தக்க வைக்கும் உத்திகளுக்காக தனது படை பலத்தை கணிசமான அளவு உயர்த்த தலைப்பட்டுள்ளது அரசாங்கம்.

இராணுவத்தில் 25 வீதமும், கடற்படையில் 50 வீதமும், வான்படையில் 100 வீதமும், ஊர்காவல் படையில் ஏறத்தாழ 90 வீதமுமான படை அதிகரிப்பை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதாவது முப்படையினருக்கும் 50,000 பேரை திரட்டும் அதே சமயம் ஊர்காவல் படையினருக்கு 18,000 பேரையும் திரட்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இராணுவம், கடற்படை, வான்படை, காவல் துறை, சிறப்பு அதிரடிப்படை, ஊர்காவற் படையினர் என படையினரின் மொத்த எண்ணிக்கை இந்த வருடம் 300,000ஐ தாண்டப்போகின்றது.

அரசின் இந்த படைச் சேர்ப்புக்கள் எவ்வளவு தூரம் வெற்றிபெறும் என்பதும் போரில் காயப்படுபவர்கள், கொல்லப்படுவோர், தப்பி ஓடுவோர் (கடந்த 28 மாதங்களில் 10,000க்கு மேற்பட்டோர் இராணுவத்தில் இருந்து தப்பி

**இராணுவத் தொகை தரவுகளில் 35ஆவது இடத்தைப் பிடித்திருந்த இலங்கை எதிர்காலத்தின் படை அதிகரிப்பு இலக்கை அடைந்துவிட்டால் அது 20ஆவது இடத்தைப் பிடித்துவிடும் என கணிக்கப்படுகின்றது.**



ஓடியுள்ளதாக படைத்தரப்பு அண்மையில் தெரிவித்திருந்தது) போன்றவர்களால் ஏற்படும் வெற்றிடத்தையும் நிரப்பி மேலதிகமான அதிகரிப்புக்கு இது போதுமா என்பவை எல்லாம் ஒருபுறம் இருக்க, சின்னஞ்சிறிய தீவின் படை பலம் கட்டுக்கடங்காது ஊதிப் பெருக்கப் பேர்கின்றது என்பது வெளிப்படை.

அதாவது இதுவரை காலமும் உலகின் 101முக்கிய நாடுகளின் இராணுவத் தொகை தரவுகளில் 35 ஆவது இடத்தைப் பிடித்திருந்த இலங்கை எதிர்காலத்தின் படை அதிகரிப்பு இலக்கை அடைந்துவிட்டால் அது 20 ஆவது இடத்தைப் பிடித்துவிடும் என கணிக்கப்படுகின்றது.

அதாவது தற்போது 20ஆவது இடத்தில் உள்ள பிரான்ஸையும் அது பின்னே தள்ளிவிடும். செயற்றிறன் மிக்க துருப்புக்களின் (Active Troops) எண்ணிக்கையில் இஸ்ரேல், ஜப்பான், பிரித்தானியா, இத்தாலி, சவூதி அரேபியா போன்ற நாடுகளை எல்லாம் விட இலங்கை முன்னணியில் திகழும் என்பதே தற்போதைய அரசின் படைச்சேர்ப்பு உரிய இலக்கை அடைந்தால் ஏற்படும் மாற்றம்.

தெற்காசியப் பிராந்திய சார்க் அமைப்பு நாடுகளை எடுத்துக் கொண்டால் இலங்கைப் படையினர் எண்ணிக்கை மூன்றாவது இடத்தையும் படையினருக்கும் மக்களுக்கும் இடையில் உள்ள விகிதத்தில் முதலாவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

அதாவது 1000 மக்களுக்கு இலங்கை 9.10 துருப்பினரையும், இந்தியா 1.20 துருப்பினரையும், பாகிஸ்தான் 3.72 துருப் பினரையும், பங்களாதேஷ் 0.87 துருப்பினரையும், நேபாளம் 2.28 துருப்பினரையும் கொண்டுள் ளன.

**1000 மக்களுக்கு இலங்கை 9.10 துருப்பினரையும், இந்தியா 1.20 துருப்பினரையும், பாகிஸ்தான் 3.72 துருப்பினரையும், பங்களாதேஷ் 0.87 துருப்பினரையும், நேபாளம் 2.28 துருப்பினரையும் கொண்டுள்ளது.**

தெற்காசியப் பிராந்தியத்தில் இலங்கை அரசின் பாதுகாப்புச் செலவும் மிக அதிகமானது. நாட்டின் மொத்த உற்பத்தியில் 4.1 வீதத்தை அது பாதுகாப்புக்கு செலவிட்டு வருகின்றது.

ஏனைய முக்கிய தென்ஆசிய நாடுகளை நோக்கினால் இந்தியா 2.5 வீதமும் பாகிஸ்தான் 3.5 வீதமும் செலவிடுவது குறிப்பிடத்தக்கது.

எனினும் அரசின் இந்தப் பாதுகாப்புச் செலவு விகிதம் விடுதலைப்புலிகளின் வான் தாக்குதலை தொடர்ந்து 5.9 விகிதமாக அதிகரித்துள்ள துடன் மேலதிக அதிகரிப்பும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் தற்போது மேற்கொள்ளப்படும் இலங்கையின் படைவலு அதிகரிப்பானது தனியே படையினரின் எண்ணிக்கை மற்றும் பாதுகாப்புச் செலவுகளை சார்ந்ததாக மட்டுமல்லாது அதன் படைக் கலங்களின் தன்மையிலும் கடுமையான மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

சாதாரண மோட்டார்கள் மற்றும் ஆட்லறிகளை பயன்படுத்திய இராணுவம் பல்குழல் உந்துகளை செலுத்திகளை பயன்படுத்தும் அதேசமயம் குறுந்தூர ஏவுகணைகள் குறித்தும் சிந்தித்து வருகின்றது.

கடற்படையும் டோராக்களின் கடுமையான இழப்புக்களை தொடர்ந்து ஏவுகணைக் கப்பல்கள், உலங்கு வானூர்திகளை காவும் கப்பல்கள், சண்டைப் படகுகளுக்கான அதிக தூர வீச்சுக் கொண்ட பீரங்கிகள் என தரமுயர்த்தலில் ஈடுபட்டு வருகின்றது.

வான்படையின் வளர்ச்சி மிக அதிகமானது .மூன்றாம் தலைமுறை தாக்குதல் விமானங்களில் இருந்து சடுதியாக மிக வும் அதிகவிலையும், பெருமளவு பராமரிப்பு செலவும் மிக்க நான்காம் தலைமுறை விமானத்தின் பக்கம் அது சென்றுள்ளது. மேலும் அவற்றிற்கு பயன்படுத்தப்படும் ஆயுதங்களும் மிகவும் நவீனமானவை என்பவற்றுடன் அதிகவிலையுமுடையவை.

லேசர் மூலம் வழிநடத்தப்படும் குண்டுகள், ஏவுகணைகள், பதுங்கு குழிகளை ஊடுருவிச் செல்லும் குண்டுகள், முப்பரிமாண ராடர்கள், வானில் இருந்து வானுக்கு ஏவப்படும் ஏவுகணைகள், தரையில் இருந்து வானுக்கு ஏவப்படும் ஏவுகணை கள் என கொள்வனவு செய்யப்படப் போகும் ஆயுதங்களின் பட்டியல் மிக நீளமானது. இவை தவிர தரைப்படைக்கு பாகிஸ்தானி டம் இருந்து மேலதிகமாக 40 டாங்கிகளை கொள் வனவு செய்யவும் இந்தியாவிடம் இருந்து கண்ணிவெடி எதிர்ப்பு கவசவாக னங்களையும் கொள்வனவு செய்யவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இருந்தபோதும் இலங்கையைப் பொறுத்தவரையில் ஆளணி ஆயுதங்கள் என்பவற்றின் அதிகரிப்பு ஒரு மட்டுப்படுத்தப் பட்ட நிலையை அடைவதற்கே அதன் பொருளாதாரம் இடம்கொடுக்கும்.

எனவே தற்போது நடைபெற்று வரும் போரினால் கடுமையாக சிதைந்து போயுள்ள பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில் இந்த படைபல அதிகரிப்புக்கலை அரசு எவ்வாறு சீராகப் பேணப்போகின்றது என்பது பெரும் கேள்விக்குறியே. அதாவது இத்தகைய படையினரின் அதிகரிப்பு மற்றும் ஆயுதங்களின் தெரிவுகள் எல்லாம் சிட்டுக்குருவியின் தலையில் பனங்காயை வைப்பது போன்றது.

இவை தவிர பொருளாதாரத்தில் பல வீனமான நாடுகளின் படைத்துறை அதிகரிப்புக்கள் ஒருபோதும் சமச்சீர் தன்மையை அடைந்ததில்லை.

அண்மைய காலங்களில் உலகில் மிக வேகமாக இராணுவமயமாக்கப்பட்ட நாடாக இலங்கை மாற்றமடைந்துவருகின்ற போதும் அது ஒரு சமச்சீர் அற்ற அதிகரிப்பாகவே காணப்படுகின்றது.

ஏனெனில் படையினரின் எண்ணிக்கை அதிகரிப்புடன் ஒப்புநோக்கும் போது அவர்களின் ஆயுதங்களிள் எண்ணிக்கை அதிகரிப்பு மிகவும் குறைவானது. உதாரணமாக இலங்கையைவிட படையினரின் எண்ணிக்கையில் குறைவான பங்களாதேஷ் 200 தொடக்கம் 300 வரையிலான பல்வேறு வகையான டாங்கிகளையும், 125க்கு மேற்பட்ட தாக்குதல் விமானங்களையும் கொண்டிருப்பதையும் குறிப்பிடலாம்.

அதேபோலவே படையினரின் மொத்த எண்ணிக்கை தொடர்பாக ஆராயப்பட்ட 101 நாடுகளில் 20 ஆவது இடத்தை பிடிக்கப் போகும் இலங்கைக்கு கீழே உள்ள இஸ்ரேல், ஜப்பான், பிரித்தானியா, இத்தாலி, சவூதி அரேபியா போன்ற பெருமளவிலான நாடுகளின் படை பலமும் ஆயுத வளமும் ஓரளவேனும் சமச்சீராக இருப்பதைக் காணலாம்.

மரபுவழி சமர்க்களங்களில் விடுதலைப் புலிகளை எதிர்கொள்வதில் அரச படைகளுக்கு ஏற்பட்ட நெருக்கடிகள் எல்லாம் இதன் அடிப்படையில் தான்தோன்றியிருந்தன. அதாவது இலங்கைப் படையினர் மரபுவழிச் சமர்களை எதிர்கொள்ளக்கூடியதான ஒரு சீரான வளர்ச்சியை இதுவரை பெற்றிருந்ததில்லை.

இந்த சமச்சீர் அற்ற படைவலு அதிகரிப்பும் பெரும் சமர்க்களங்களில் சந்திக்கப் போகும் நெருக்கடிகளை கடந்த கால சமர்களின் மூலம் ஓரளவு ஊகிக்க முடியும். இதனை சுருக்கமாகக் கூறின் களத்தின் தன்மையை விட அரசியல் தளத்தின் தாக்கம் தான் படையினரின் அதிகரிப்புக்கள், திட்டமிடல்களில் அதிகம் பங்கெடுத்து வருகின்றது.

எனவே இந்த வருடத்தின் இறுதிக்குள் எட்டப்படப்போகும் சடுதியான பாரிய படை வளர்ச்சி தென் ஆசியப் பிராந்தியத்தில் இலங்கையை மூன்றாவது பெரும் படை கொண்ட நாடாக காண்பிக்குமே தவிர, போரிடும் தன்மையில் அதற்கு எத்தனையாவது இடம்என்பதை எதிர்வுகூறமுடியாது.

**நன்றி: வீரகேசரி வார இதழ்**

ஆனால் இந்த படை பல அதிகரிப்புக்கு பக்கபலமாக இருந்தவர்கள் ஒன்றை மட்டும் உணரத் தவறிவிட்டனர். படைத்துறையில் சடுதியாக வளர்ச்சி கண்ட நாடுகள் எவையும் சமாதானம் நோக்கி திரும்பிப் பார்த்த வரலாறுகள் உலகில் இல்லை.

எனவே தற் போதைய படைத்துறை அதிகரிப்புக்கள் போரில் மாற்றத்தை உண்டு பண்ணுமா இல்லையா என்பதை விட சமாதானத்தை கண்காணாத தூரத்திற்கு தள்ளியுள்ளது.

## வருடாந்த குருபூசை

(யாழ்ப்பாணம்)

கந்தர் மடம் இல. 18, குமாரசாமி வீதியில் அமைந்துள்ள வேதாந்த மடம் சிவ குருநாத குருபீடம், மகாதேவ ஆச்சிரமம் எனும் நாமங்களால் வழங்கப்படும் குரு பீடத்தின் 5ஆவது குரு பீடாதிபதியாக இருந்து 1968இல் சமாதியடைந்த இராமலிங்க சுவாமிகளின் வருடாந்த குருபூசை நாளை செவ்வாய்க்கிழமை (ஆனி மாத திருவோண நட்சத்திரத்தில்) காலை 10.30 மணியளவில் வேதாந்த மடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தேவார இசைமணி S.R. திருஞானசம்பந்தரின் பண்ணிசையும், அதனைத் தொடர்ந்து அபிஷேக ஆராதனைகளும் இடம்பெறும். (அ)

நாவில் எலும்புகள் கிடையாது. ஆனால் அது எலும்புகளை நொருக்க வல்லது.

-அல்பேனியா

வலம்புரி

# ஐக்கிய தேசியக் கட்சிமீது குற்றஞ்சுமத்துகிறது அரசு

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவைப் பெற்றுத்தந்தால், இரண்டு மாதங்களுக்குள் அரசியல் தீர்வைக் காண முடியும் என வெளிநாட்டுத் தூதுவர்களுக்குஇலங்கைஅரசுஅறிவித்துள்ளது.

அரசின் அறிவித்தலின்படி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசு தயாராகவிருப்பது போலவும் அதற்கு எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு தர மறுப்பதுபோலவும் உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒத்துழைப்பைப் பெற்றுத் தந்தால் இரண்டு மாதங்களுக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமென அரசின் அறிவிப்பு வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ளது.

மேற்போந்த கோரிக்கையை வெளிநாட்டுத் தூதுவர்களிடம் தெரிவிப்பதன் மூலமாக சமகாலத்தில் இலங்கை அரசுக்கு வெளிநாடுகளினால் ஏற்படுத்தப்படும் அழுத்தங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள அரசுமுற்படுவதுடன், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாததற்கான குற்றத்தை எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலையில் கட்டி விடுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும் ஆட்கடத்தல் மற்றும் கொலைகள் இடம் பெறுவதாகவும் இதற்கு அரசே காரணம் எனவும் வெளிநாடுகளில் தெரிவித்து வருகின்றார்.

இது நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகமாகும். பதவிக்காக ரணில் விக்கிரமசிங்க சிங்கள நாட்டைக் காட்டிக் கொடுக்கக் கூடாது எனக் கூறி வந்த அரச தரப்பு இப்போது தொப்பியைப் பிரட்டி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில், ரணில் விக்கிரமசிங்க ஒத்துழைப்பு வழங்கவில்லை எனக் கூறி வருகின்றது.

உண்மையில் இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு இதய சுத்தியுடன் விரும்புமாயின், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசு விடுதலைப்புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையை விட்ட இடத்திலிருந்து தொடங்கியிருக்க வேண்டும்.. அல்லது ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் ஏ-9 பாதையைத் திறந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையை உருவாக்கி இருக்க வேண்டும்.

இதைவிடுத்து ஐக்கிய தேசியக் கட்சி அரசும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை மாற்றியமைக்கப்பட வேண்டும் - உடன்படிக்கையில் தவறுகள் உண்டு என புதுக்கதை விட்டால் சமாதானம் எட்டாக் கனியாகவேயிருக்கும்.

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வில், எதிர்க்கட்சியின் ஒத்துழைப்புத் தேவை என்பது மறுக்க முடியாத உண்மை. எனினும் அந்த ஒத்துழைப்பைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் - ஒழுங்குகளை அரசு செய்தாக வேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் பொதுஉடன்பாட்டைச் செய்து கொண்ட ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி அந்த உடன்படிக்கையைத் தொடர்ந்து பேணுவதற்கு-கடைப்பிடிப்பதற்குத்தவறிவிட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களைத் தன் பக்கம் வளைத்துப்போட்டால் உடன்படிக்கை எங்ஙனம் நிலைபேறு கொள்ளும்? ஆக, எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக அடிக்கடி - வெளிப்படையாகக் கூறி வருகின்றது.

அதனை அரசு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதைவிடுத்து வெளிநாட்டுத் தூதுவர்களிடம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒத்துழைப்பைப் பெற்றுத் தாருங்கள் எனக் கேட்பது நாகரிகமானதல்ல.

# மகிந்த நடத்திய 'நோர்வே' நாடகம்

**- இக்பால் அத்தாஸ்**

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமைநாடுகளின் அழுத்தங்களிலிருந்து தப்பிக்க மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட நடவடிக்கை ஒன்றை கொழும்பு ஆங்கில ஊடகமான சண்டே ரைம்ஸ் அம்பலப்படுத்தியிருக்கின்றது. சண்டே ரைம்ஸ் வார இதழில் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான பத்தி எழுத்தாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளதாவது,

ஒஸ்லோவில் இணைத்தலைமை நாடுகளின் கூட்டம் நடைபெறும் வேளையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 24 ஆம் திகதி நோர்வே அனைத்துலக அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹேய்ம்முக்கு கொழும்பிலிருந்து தொலைபேசி அழைப்புச் சென்றது.

மகிந்தவின் மூத்த ஆலோசகரான பசில் ராஜபக்ஷ முக்கியமான தகவல் ஒன்றை எரிக்சொல்ஹெய்மிடம் தெரிவித்தார். நோர்வேயின் சிறப்புத் தூதுவர் ஜோன் ஹான்ஸன் பௌயரின் கொழும்புப் பயணத்திற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள அரசாங்கம் விரும்புகின்றது என்று எரிக்சொல்ஹெய்மிடம் தெரிவிக்கப்பட்டது.

அதாவது கிளிநொச்சிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களை ஹான்ஸன் பௌயர் சந்தித்து அமைதிப் பேச்சுக்களை ஒழுங்கு செய்வதற்காகும். இத் தகவல் மகிந்த ராஜபக்ஷ சார்பில் எரிக்சொல்ஹெய்மிடம் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் ஜெனீவாவில், முன்னர் எரிக்சொல்ஹெய்முடன் நேரடியாக சந்தித்துப் பேசிய போது பௌயரின் உடனடிப் பயணத்திற்கான சாதகமான பதிலை மகிந்த ராஜபக்ஷ தெரிவிக்கவில்லை. இணைத் தலைமைநாடுகளின் அழுத்தங்களுக்காகாமல் இருக்க பசில் ராஜபக்ஷ மூலமாக மகிந்த தகவல் அனுப்பியுள்ளார்.

அத்துடன் நோர்வேயை அமைதி முயற்சியின் அனுசரணையாளர்களாக தொடர்ந்து நீடிக்க தமது அரசு இணக்கம் தெரிவிப்பதையும் மகிந்த வெளிப்படுத்தியிருக்கின்றார். கடந்த ஓராண்டுக்கும் மேலாக அரசாங்கத்திற்கும் ஒஸ்லோத் தூதுவர்களுக்கும்இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் முக்கிய திருப்பம் இது.

ஒஸ்லோவிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் ஜோன்ஸ் ஹான்ஸன் பௌயர் தனது இலங்கைக்கான விசாவைப் புதுப்பித்துள்ளார். அவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியில் சந்திக்கவுள்ளார்.

மகிந்தவின் இச் செயற்பாட்டினால் இலங்கை குறித்த இணைத் தலைமை நாடுகளின் விமர்சனப்பார்வைவிலகவில்லை. எரிச்சொல்ஹெய்மைச் சுட்டிக்காட்டி கருத்துவெளியிட்ட நோர்வே ஊடகங்கள் இணைத்தலைமை நாடுகள் தற்போதும் கவலை கொண்டிருப்பதாகவே கூறின.

இணைத் தலைமை நாடுகள் கூட்டத்தில் ஆட்கடத்தல், படுகொலைகள், உள்நாட்டில் இடம்பெயர்தல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன. அரசாங்கம் விடயங்களைக் கையாளும் வழிமுறைகள் குறித்தும் விமர்சிக்கப்பட்டது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

முடிபடைந்த இரண்டு நாள் கூட்டத்தின் பின்னர் நோர்வே எதுவித அறிக்கையையும் வெளியிடாது விட்டாலும் நோர்வே ஊடகங்களுக்குச் சொல்ஹெய்ம் இணைத் தலைமை நாடுகள் தொடர்ந்தும் அமைதியற்றிருப்பதாகத் தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் நிலைப்பாடு, பாதுகாப்பு நிலைப்பாடு, மனித உரிமைகள், உள்[illegible]ரில் இடம்பெயர்[illegible], ஆட்கடத்தல், கொலைகள், காணாமல் போதல் [illegible] சீரழிந்த நிலையில் உள்ள சட்டதிட்டங்கள் ஆகிய[illegible]யும் இணைத்தலைமைகள் சேர்த்துள்ளன.

இவ்விடயங்களை அரசாங்கம் கையாளுகின்ற முறையானது மிகவும் ஆபத்தானது. இவற்றிற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறே பலத்த குற்றச்சாட்டுக்கள் விடுதலைப்புலிகள் மீதும் சுமத்தப்பட்டது. அதாவது மீள வன்முறைக்குத் திரும்பியது, மனித உரிமை மீறல்கள், சிறார்களை வன்முறையில் ஈடுபடுத்தல் என்பனவே உதவி வழங்கும்நாடுகளின் கவனத்தின்படி இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் தத்தமது வாதப்பிரதிவாதங்களையும் தீர்மானங்களையும் ஒஸ்லோவில் நடைபெற்ற கூட்டத்தில் விபரக் குறிப்புக்களாகச் சமர்ப்பித்திருக்க வேண்டும்.

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டமைப்பு நான்கு பெரிய விடயங்களில் ஓர் தீர்வை எட்டியுள்ளன.

❖ இன முரண்பாடுகளுக்கு இராணுவத் தீர்வு அமைய முடியாது. ஒரு நிலைக்கக் கூடிய அரசியல் தீர்வுதான் தற்போதைய அரசினதும் விடுதலைப்புலிகளினதும் முரண்பாட்டுக்கு ஏற்புடையது. அரசினாலும் விடுதலைப்புலிகளினாலும் நடாத்தப்படும் மனித உரிமை மீறல்கள் நிறுத்தப்பட வேண்டும். சகல பிரிவனராலும் காணாமல் போதல், கடத்தல், விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்படும் கட்டாய ஆட்சேர்ப்பு ஆகிய எக்காலத்திலும் இன்றைய பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையாது.

ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசானது சகல மனித உரிமைகள் பற்றிய கூட்டங்களிலும் பங்கு பற்றும் ஒரு கட்சி. இதற்கு மனிதஉரிமைகளைப் பாதுகாக்கும் பாரிய பொறுப்பும் சட்டமூலமும் உண்டு. அரசு பாதுகாப்புப் படையினருக்கும் பொலிஸாருக்கும் மனித உரிமைகளைப் பேணுவது பற்றி சரியான அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்.

❖ சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களினால் வன்னி உட்பட இடம்பெயர்ந்த மக்களுக்கு அந்தந்த இடங்களில் அவர்களுக்கான உதவிகள் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

❖ இலங்கை நோர்வேயை சமாதான முன்னெடுப்பாளர்களாக ஏற்றுக் கொண்டால் அதன்படி இருபகுதியினரும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வருவதானால் ஒஸ்லோ விடுதலைப்புலிகளின் தலைவரை கிளிநொச்சியில் சந்திப்பதற்கு அனுமதியளிக்க வேண்டும்.

❖ அரசினால் தமிழ் மக்களுக்குரிய உண்மையான அவர்களது மனக் குறைகளை தீர்க்கக் கூடிய ஓர் தீர்வுப்பொதியை மேசைக்குக் கொண்டு வரவேண்டும். தற்போதைய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்மொழிவுகள் ஏற்றுக் கொள்ளக் கூடியன அல்ல.

சர்வதேச சமூகத்தின் உதவியைக் கூட்டி ஓர் தீர்வு எடுப்பதனால் அது ஏற்புடையதாக அமையலாம். உதவி வழங்கும் நாடுகள் பேச்சுவார்த்தை மேசைக்கு வரும் குழுக்கள் இதுபற்றி ஓர் தீர்வுக்கு வரலாம் என அபிப்பிராயப்படுகின்றார்கள்.

இவற்றுக்கிடையில் பெயர் குறிப்பிட விரும்பாத உயர்மட்ட அரச சார்பு அதிகாரி சண்டே ரைம்ஸுக்குக் கூறுகையில்; நாம் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டமைப்பினரின் பல விடயங்களில் உடன்பாடுடையவர்கள் அல்ல. அவர்கள் என்ன சொல்லப் போகின்றார்கள் என்பது எமக்கு ஏற்கனவே தெரியும் என்றார். (அ)

# சீனாவின் ஆடைத் தொழில் அதிகரிப்பால் இலங்கை ஏற்றுமதியாளர்கள் பாதிப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்திற்கான சீனாவின் ஆடைத் தொழில் வர்த்தகம் அதிகரித்துள்ளமையால் இலங்கை ஏற்றுமதியாளர்கள் நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் நிலையில் உள்ளனர்.

மத்திய தரைக்கடல் நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் ஏற்றுமதியாளர்கள் இந்த ஆண்டுக்குள் தங்களது ஆடைத் தொழிலக உற்பத்திகளை அனுப்ப ஒரு 40 அடி கொள்கலனுக்கு 800 அமெரிக் டொலர் செலுத்த வேண்டியிருக்கும் என்று இலங்கை ஏற்றுமதியாளர்கள் அமைப்பு எச்சரித்துள்ளது.

இலங்கையில் மொத்த ஏற்றுமதியில் 2 பில்லியன் டொலர் பங்களிப்பை ஆடைத் தொழிற்சாலை அளித்து வருகிறது. ஐரோப்பிய ஒன்றியத்துக்கான கப்பல் சரக்குக் கட்டணம் உயர்த்தமைக்கு சீனாவின் ஆடைத் தொழிற்சாலை வர்த்தகம் அதிகரித்திருப்பதை காரணமாகச் சுட்டிக்காட்டுகின்றனர்.

சீனாவிலிருந்து கொழும்புக்கு கப்பல்கள் வரும்போதே சீனாவின் கொள்கலன்களே இடங்களை ஆக்கிரமித்துக் கொள்கின்றன. இலங்கை ஏற்றுமதியாளர்களுக்குக் கப்பல்களில் போதுமான இடம் ஒதுக்கப்படுவதில்லை. இதனால் கொள்கலனுக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணம் மிகக் கடுமையாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் கொள்கலன் கட்டணம் அதிகரித்து வரும்நிலையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் மேலும் 400 டொலர் அது அதிகரிக்க நேரிடும் என்று இலங்கை ஏற்றுமதியாளர்கள் அமைப்பின் தலைவர் நிரல் கதவராச்சி தெரிவித்துள்ளார்.

இறக்குமதி வர்த்தகமானது 2005 ஆம் ஆண்டில் 8.8 பில்லியன் அமெரிக்க டொலராகவும் 2006 ஆம் ஆண்டு 10.2 பில்லியன் டொலராகவும் இருந்தது. அதேநேரத்தில் ஏற்றுமதியானது 0.5 பில்லியன் டொலர் அதிகரித்தும் இருந்தது. பெற்றோலியம் இறக்குமதியானது 2.8 பில்லியனிலிருந்து 3 பில்லியனாக அதிகரித்துள்ளது. இது எதிர்பாராத அதிக உயர்வாகக் கருதப்படுகின்றது. (எ-5)

# பொசன் தினத்தில் இராணுவத்தால் மதிய உணவு வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பொசன் தினத்தையொட்டி புதுக்குடத்தனை, அம்பன் ஆகிய பாடசாலைகளில் வைத்துப் பொதுமக்களுக்கு இராணுவத்தினரால் நேற்று முன்தினம் மதிய உணவு வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்கும் அமைய 551-வது பிரதேச கட்டளை அதிகாரியின் ஏற்பாட்டில் இவ் உணவு வழங்கும் நிகழ்வு மேற்கொள்ளப்பட்டதாக யாழ்.பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைத்தலைமையகத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அப்பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்களுக்குப் புத்தகம், அப்பியாசக் கொப்பிகள், பேனைகள் மற்றும் பென்சில்களும் குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருள்களும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை 515-வது படைப் பிரிவிலும் மதிய உணவு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஏ)

## புதிய கோணத்தில் சமாதான முயற்சி

# முன்னாள் ஐ.நா.செயலர்களுடன் எரிக் சொல்ஹெய்ம் ஆலோசனை



(கொழும்பு)


இலங்கையில் புதிய கோணத்தில் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது தொடர்பாக நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல் ஹெய்ம், முன்னாள் ஐ.நா. சபைச் செயலாளர்களான கொபி அனான் மற்றும் பூட்ரஸ் பூட்ரஸ் காலி ஆகியோருடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இலங்கையில் மீண்டும் சமாதானப் பேச்சு வார்த்தைகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கையின் சமாதானத் தூதுவரும் நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சருமான எரிக்சொல் ஹெய்ம் மேற்கொண்டுள்ளதாக தெரியவருகின்றது.

அதன்படி இலங்கை அரசிடமும் விடுதலைப்புலிகளிடமும் உறுதிமொழிகளைப் பெற்றுக் கொண்டு புதிய கோணத்தில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க இணைத் தலைமை நாடுகள் தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஒஸ்லோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமைகளின் மாநாட்டின் பின்னர் இலங்கையில் சீர்குலைந்துள்ள சமாதான முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுப்பது குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர்களான கொபி அனான், பூட்ரஸ் பூட்ரஸ் காலி ஆகியோரைச் சந்தித்து ஆலோசனைகளையும் அவர் பெற்றுக் கொண்டுள்ளார்.

உலக நாடுகள் பலவற்றில் இடம் பெற்று வரும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து சமாதான முயற்சிகளை மேற்கொண்டு வரும் விசேட அனுபவமும் அறிவாற்றலும் கொண்டவர்களது மாநாடு ஒன்றும் ஒஸ்லோவில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.



இந்த மாநாட்டில் எரிக்சொல் ஹெய்ம், யப்பான் விசேட தூதுவர் யசூசி அகாஷி, முன்னாள் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர்களான கொபி அனான், பூட்ரஸ் பூட்ரஸ் காலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு எரிக்சொல் ஹெய்ம் இலங்கை சமாதான முயற்சிகள் தொடர்பாக கலந்துரையாடி ஆலோசனைகளை பெற்றுள்ளார். மேற்குறிப்பிட்ட மாநாட்டின்போது இலங்கை, சோமாலியா, சூடான், ஆப்கானிஸ்தான், பலஸ்தீனம் ஆகிய நாடுகளின் பிரச்சினைகளில் சமாதானத் தூதுவர்களாக செயல்படுபவர்கள் நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கையில் இரு தரப்பினரிடமும் உறுதி மொழிகளைப் பெற்றுக்கொண்டு புதிய வடிவில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க சமாதானத் தூதுவர்கள் தீர்மானித்துள்ளதாக தெரிய வருகின்றது. (எ-1)

## முகத்துவாரத்தில் தேடுதல் யாழைச் சேர்ந்தோர் கைது

(கொழும்பு)

கொழும்பு முகத்துவாரம், சொய்சாபுர பகுதிகளில் படையினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலில் 11 தமிழ் இளைஞர், யுவதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முகத்துவாரம் பகுதியில் படையினரும் பொலிஸாரும் இணைந்து நேற்று முந்தினம் நள்ளிரவு முதல் நேற்றுக் காலை 6 மணி வரை தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். பஸ்களில் அழைத்து வரப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட படையினரும் பொலிஸாரும் வீடுவீடாக தேடுதல் நடத்தினர். இத் தேடுதலின் போது நான்கு பெண்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். அடையாளத்தினை உறுதிப்படுத்த முடியாத நால்வரே கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை சொய்சாபுர பகுதியில் நேற்றுக் காலை படையினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது பெண் ஒருவர் உட்பட ஏழு தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட தமிழர்களில் பெரும்பான்மையோர் யாழைச் சேர்ந்தவர்கள் எனவும்அடையாளத்தை உறுதிப்படுத்த தவறியமையால் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

### ஜே.வி.பியுடன்...

ராஜபக்ஷவிடம் பட்டியலை அளித்துள்ளார்.

கனடாவுக்கு குடிபெயர்ந்திருக்கும் ஜே.வி.பியின் மத்திய குழு உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நந்தன் குணதிலகவையும் பசில் ராஜபக்ஷ தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் தமது தலைமையிலான ஜே.வி.பி.குழு தனித்து இயங்க வேண்டுமாயின் நந்தன குணதிலக்கவின் ஆதரவு அவசியம் என்று பசில் ராஜபக்ஷவிடம் விமல் வீரவன்ச கூறியதைத் தொடர்ந்து நந்தன குணதிலக்கவுடன் பசில் ராஜபக்ஷ பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். (ச-5)

### அமைச்சின்...

செயலாளர் உட்பட நால்வர் உயிரிழந்ததுடன் ஐவர் படுகாயமடைந்தனர். ஜீப் வண்டி வீதியை விட்டு விலகி மரம் ஒன்றுடன் மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. (ச)

### ஸ்கொட்லன்ட்...

ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது; 2006 09.13 தொடக்கம் 2007.02.25 வரையிலான காலப் பகுதியில் இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் பிரகாரம் 2007 மார்ச் மாதம் முதலாம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட இறுதி அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை 2007 மார்ச் மாதம் முதலாம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. விசாரணைகளை செப்ரெம்பர் 13 ஆம் திகதி முதல் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டபோது 2006 ஜனவரி மாதம் முதல் இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்தமையினால் விசாரணைகளை ஜனவரி மாதம் முதல் ஆரம்பித்தோம்.

கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் 150 முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு 2006 டிசம்பர் மாதம் ஜனாதிபதியிடம் இடைக்கால அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்தோம். தனிப்பட்ட விசாரணை முறைப்பாடுகளை நான் தனிப்பட்ட முறையிலும் விசாரணை செய்தேன்.

இதன்போது விசாரணைக்காக அழைக்கப்பட்டவர்கள் யாரும் விசாரணையில் இருந்து விலகிச்செல்ல வில்லை. பொலிஸ் பொறுப்பதிகாரி உள்ளிட்ட உயர் அதிகாரிகளும் விசாரணையில் கலந்து கொண்டனர். (எ-5)

### விடுதலைப்புலிகளின்...

கணைகள் கொண்டு நடத்திய இத் தாக்குதலில் பம்பைமடு அருகே அமைக்கப்பட்டு இருந்த ஆட்லறித் தளம் அழிக்கப்பட்டது.

அத் தளத்தில் 820 எறிகணைகள் அழிக்கப்பட்டு விட்டதாக இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. வவுனியாவிலிருந்து 9 கிலோ மீற்றர் தொலைவில் மன்னார் வீதியில் பம்பைமடு உள்ளது.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் குறித்து தற்போது விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. விடுதலைப்புலிகள் மிகத் துல்லியமாக இலக்கைத் தாக்கியுள்ளனர். செல்லிடப்பேசியின் ஊடாகயாரேனும் அவர்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கினார்களா?

செக்டர் 2-க்குப் பின்னால் பொலிஸின் கட்டுப்பாட்டில் ஆட்லறி களஞ்சியம் உள்ளது. விடுதலைப்புலிகளின் முதல் இரண்டு 130 மி.மீ ஆட்லறி எறிகணைகள் பாதுகாப்பு நிலைகளுக்கு அப்பால் வீழ்ந்துள்ளன.

அவற்றில் ஒன்று 40 இராணுவத்தினர் பதுங்கியிருந்த பதுங்குகுழிக்குள் வீழ்ந்தது. அதன் பின்னரான ஆட்லறி எறிகணைகள் தான் களஞ்சியம் மீது சரியாக வீழ்ந்தன. அழிக்கப்பட்ட 130 மி.மீ. ஆட்லறி எறிகணை ஒன்றின் விலை 30 ஆயிரம் ரூபா. மொத்தமாக இராணுவத்துக்கு 24.6 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

### அரசு...

தடுக்கப்பட வேண்டும்.

மனித உரிமைகளைக் கண்காணிப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபைக் குழுவை நியமிப்பது தொடர்பாக செயற்பாடுகளை வலுப்படுத்த வேண்டும். இலங்கையில் அமைதி வழித் தீர்வு ஏற்படுத்த அமெரிக்கா தனது முயற்சிகளை தீவிரப்படுத்த வேண்டும் என்று அக்கடிதத்தில் வலியுறுத் தியுள்ளனர். (எ-5)

### சந்திரிகாவை...

பிரதிநிதிகள் பங்கேற்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சுதந்திரக்கட்சியின் அதிருப்திக்குழுவை உருவாக்கியுள்ள மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராட்சி ஆகியோர் சந்திரிகா குமாரதுங்கவின் ஆதரவாளர் என்பதால் கட்சியின் தேசிய மாநாட்டிற்கு சந்திரிகா குமாரதுங்கவை அழைக்கத் தேவையில்லை என்று கருதுகின்றனர்.

அதேநேரத்தில் சுதந்திரக்கட்சியில் உள்ள சந்திரிகா குமாரதுங்கவின் ஆதரவாளர்களோ கட்சியின் பாதுகாவலர் பொறுப்பில் உள்ள சந்திரிகா குமாரதுங்காவிற்கு அழைப்பிதழ் அனுப்பாமல் இருக்கக்கூடாது என்று கூறி வருகின்றனர்.

இதனிடையே மங்கள சமரவீரவுக்கும் சிறிபதி சூரியாராட்சிக்கும் இம் மாநாடு குறித்து தகவல் ஏதும் தெரிவிக்கப்படவில்லை. (எ-5)

### அரசு-விடுதலைப்புலிகள்...

இலங்கையில் நடைபெற்று வரும் யுத்தத்தை நிறுத்துவதற்கு சமாதானப் பேச்சுவார்த்தை மீள ஆரம்பிக்க உதவி புரிய தாம் தயாராக இருப்பதாக அனுசரணையாளரான நோர்வே அறிவித்துள்ளது.

அதேவேளை யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் நோர்வேயின் உதவி தேவையெனக் கேட்கும் பட்சத்திலேயே தாம் இப் பணியை மேற்கொள்வோம் எனவும் அந்நாடு தெரிவித்துள்ளது. அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக் குமிடையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை ஒன்றை 2002 ஆம் ஆண்டு நோர்வே ஏற்படுத்தியது.

அவ் ஒப்பந்தம் தற்போது எழுத்துவடிவிலேயே உள்ளது. இந் நிலையிலேயே இரு தரப்பிடமும் மீண்டும் சமாதானப் பேச்சை ஆரம்பிக்க உதவி செய்ய தாம் தயாராக உள்ளதாக நோர்வே கேட்டுள்ளது.

நாங்கள் உதவி செய்யத் தயாராக உள்ளோம் இலங்கை அரசு எம்மை நடுநிலைமையாளராக இருக்கும்படி விரும்பினால்' என நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் கடந்த காலங்களில் எமது ஈடுபாட்டை காட்டியுள்ளோம். தற்போது இரு தரப்பும் கேட்கும் பட்சத்தில் அப் பணியைத் தொடர தயாராக உள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வன்முறைகளினால் தாம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்ல முடியாமல் தடுத்துள்ளதாகத் தெரிவித்த ஜோன் ஹான்சன் பௌயர் பாதுகாப்பு உறுதியளிக்கப்பட்டால் நாங்கள் கூடிய விரைவில் கிளிநொச்சிக்கும் செல்லத் தயாராக உள்ளோம் எனவும் குறிப்பிட்டார்.

கடந்த மாதம் ஜெனீவாவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல் ஹெய்ம் சந்தித்திருந்தார். இச் சந்திப்பு பயனுள்ளதாக இருந்ததாக பௌயர் கூறினார். (எ-1)

### எதிர்க்கட்சிக்குத்...

ஆர்.யோகராஜனுடன் பசில் ராஜபக்ஷ ஆலோசனை நடத்தியுள்ளார். இதே வேளை இ.தொ.காவுடன் பேச்சு நடாத்த ஐக்கியதேசியக்கட்சி முயற்சிப்பதாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவுடன் இணைந்து எதிர்க்கட் சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இ.தொ. கா.தலைவரை சந்தித்துப் பேசவுள்ளதாகவும் கூறப்பட்டது. (எ-1)

விசேட வகுப்புக்கள்
கணக்கீடு
A/L 2008, 2009
மாணவர்களிற்கான
விசேட வகுப்புக்கள்.
[உங்கள் இடங்களில் group classess அமைக்கப்படும்]
மேலதிக விபரங்களுக்கு
தொடர்பு கொள்க.
T.S.Bala
0779184121 (C-172)

இப் பத்திரிகை வலம்புரி என்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.07.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.